# உன்னோடே போராடினவர்களை,
# தேடியும் காணாதிருப்பாய். ஏசா 41 : 12

**போராட்டத்தின் மேல் போராட்டம் அதிகரிக்கிறதா ?**

**யோபு14 : 14 ன்படி** எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்கு குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன்– என கண்ணீர் மல்க கூறும் சகோதரியே!

**யோபு 9 : 24ன்படி** நான் பொல்லதவனாயிருந்தால் விருதாவாய் போராட வேண்டியது என்ன ? என அங்கலாய்க்கும் சகோதரனே!

**எபி7 : 1 ன்படி** பூமியிலே போராட மனுஷனுக்குக் குறிக்கப்பட்ட காலம் உண்டல்லவா ?

**ஆனாலும் வேதம் சொல்கிறது : உன்னோடேபோராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய்**

வாழ்க்கையில் எப்பொழுதும் போராட்டம் இருக்கத் தான் செய்யும் ஆனாலும்,
ஜெயகிறிஸ்து முன் செல்கிறார் , ஜெயமாக நடத்திடுவார்
ஜெயக் கீதங்கள் நாம் பாடியே , ஜெயக் கொடியும் ஏற்றிடுவோம்
ஜெயம் அல்லேலூயா –இயேசு நாமத்திற்கே – என இம்மாதம் அடிக்கடி பாடுங்கள்.

விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடு நித்திய ஜீவனைப் பற்றிக் கொள் அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்

**யாரோடெல்லாம் நமக்கு போராட்டம் உண்டு ?**

**எபேசியர் 6 : 12** ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல; துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு.

**நாம் எதற்கெல்லாம் போராட வேண்டும் ?**

**யூதா : 3** பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய் போராட வேண்டும்.

**பிலி.1:27** சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காக கூட போராடி சுவிசேஷத்திற்கு பாத்திரமாக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள்.

**எபி.12:4** பாவத்திற்கு விரோதமாய் போராடுகிறதில் இரத்தம் சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே.

**கொலோ.4:12** எப்பாப்பிராவும், நீங்கள் தேவனுக்கு சித்தமானவர்களெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும், நிலை நிற்க வேண்டுமென்று தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்.

**ரோமர் 15:32** நீங்கள் தேவனை நோக்கி செய்யும் ஜெபங்களில் நான் போராடுவது போல நீங்களும் என்னோடே கூட போராட வேண்டுமென்று . . . வேண்டிக் கொள்கிறேன்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே

**எபி.10 : 32ன்படி**, முந்தின நாட்களை நினைத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தை சகித்தீர்களே.

**இன்னும் நீங்கள் கீழ்கண்டவாறு சாட்சி கொடுக்க வேண்டும்.**

**2 தீமோ.4 : 7ன்படி,** நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்

**1 கொரி 9 : 25ன்படி** பந்தயத்திற்கு போராடுகிற யாவரும் எல்லாவற்றிலும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ளவதைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ, அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். தேவனுக்கே மகிமை

**இந்த மாதம் கீழ்கண்டவாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.**

**என்னோடே போராடினவர்களை, தேடியும் காணாதிருப்பேன்**

**பக்தன் பாடுகிறார்.**

வாழ்க்கை என்பது போராட்டமே, நல்லதொரு போராட்டமே,
ஆவிதரும் பட்டயத்தை, எடுத்து போராடி வெற்றிப்பெறு.

**உன்னோடே போராடினவர்களை, தேடியும் காணாதிருப்பாய்**